1994 மே 2]

செய்யக் கோருகின்ற அந்தத் தீர்மானத்தை மாவட்ட ஆட்சியர் சிவகெங்கை அவர்களுக்கு அனுப்புவதற்காகவும், அதிலே நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் காரைக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்கச்சொல்லி, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே காரைக்குடி நகராட்சியினுடைய ஆணையாளர் அதற்குண்டான ஆவணங்களைத் தயார் செய்து மாவட்ட ஆட்சியரை அணுகி அதற்குப் பிறகுதான், அந்த இடம் தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யப்பட்டவுடன் காரைக்குடி நகரப் பகுதிக்கான லாரிகளை நிறுத்துவதற்கு உண்டான ஏற்பாடுகள் அத்தனையும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 476, திரு. கோ. காளன், இருக்கையில் இல்லை.

வினா எண் 477, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

477—

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு சிறப்புத் தகுதிக்கான உதவித் தொகையை உயர்த்துதல்

** 20608—திரு. ஆ. சுப்புரத்தினம்:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிக் கல்வித் துறையால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்குத் தரப்படும் சிறப்புத் தகுதிக்கான (Adhoc Merit) உதவித் தொகையை ரூ.300/- லிருந்து ரூ. 400/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமையன்று அண்ணல் அம்பேத்காருடைய திருவுருவச்

சிலையை, சென்னையில் நிறுவிய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு, இன்றைக்கு ரூ.300 உதவித் தொகையானது நீண்ட நெடுநாட்களுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டது. இப்போது ஏறியிருக்கக் கூடிய விலைவாசி, பணவீக்கத்தின் அடிப்படையில் ஏழை எளிய ஆதிதிராவிட மாணவர்களுக்கு இது போதாமல் இருக்கின்ற சூழ்நிலையில் இதை உயர்த்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலமாக இதுசம்பந்தமான கருத்துரு வந்திருக்கிறது. மதிப்பெண்கள் 60 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ. 500 உயர்த்தித் தரவேண்டுமென்றும், 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.750 உயர்த்தித் தரவேண்டுமென்றும், 75 சதவீதத்திற்கு மேல் உள்ள மாணவர்களுக்கு ரூ. 1,000/- என்று 10–ஆம் வகுப்புக்கு உயர்த்த வேண்டுமென்றும், 12—ஆம் வகுப்புக்கு ரூ.1500 என்று உயர்த்தவேண்டுமென்றும் கருத்துரு அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி அரசுக்கு ரூ.35 இலட்சம் கூடச் செலவாகும் என்று 1991 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருக்கிறது. நிதிநிலைமைக் கேற்ப * வருங்காலத்தில் இதுபற்றி ஆராயப்படும்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித்தொகையானது பள்ளியில் படிக்கக் கூடிய மாணவர்களுக்குத்தான் வழங்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கல்லூரியில் இளங்கலைப் பட்டப் படிப்பு முடிந்து மேற்படிப்பிற்காக செல்லக் கூடிய மாணவர்களுக்கும் இதுபோன்ற சிறப்பு உதவித்தொகை வழங்கப்படுமா என்பதை தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்கிறபோது * என்று சொன்ன வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலைமைக்கேற்ப என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குக் கொடுத்த குறிப்பில் .. (குறுக்கீடு)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

1994 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க நிதிநிலைமைக்கேற்ப என்று திருத்திக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: 10–ஆம் வகுப்பு, 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்குத்தான் கல்விப் படிப்பைத் தொடர்வதற்காக இந்தத் திட்டம் நடைமுறையில் இருந்துகொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் பட்டப் படிப்பு மாணவர்களுக்காக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிகமான முறையில் இன்றைக்கு நாம் அவர்களுக்கு உதவித்தொகைகளும், கடன் தொகைகளும் கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் ரூ.132 கோடி ஒதுக்கீடு செய்து, செலவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி சிறப்புத் தொகை அளிப்பதற்கு வெறும் ரூ.35,000 மட்டும் செலவு செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். ரூ.132 கோடியில் ரூ.35,000 என்பது ஒரு சாதாரண தொகை. ஆகவே தாழ்த்தப்பட்ட மாணவர்களை கல்வியிலே ஊக்குவிக்கின்ற விதத்திலே அரசு மாண்புமிகு உறுப்பினர் கோரியது போன்று ரூ.500 உதவித்தொகையாக வழங்கினால் அந்த மாணவர்களுக்கு ஊக்கமாகவும், இருக்கும். உதவியைப் பெற்று, மேல் படிப்புக்குச் செல்வதற்கு வாய்ப்பாகவும் இருக்கும். ஆகவே அரசு இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகிறபோது 35 ஆயிரம் என்பது அல்ல. 35 லட்சம் என்று தான் சொன்னேன். சென்ற ஆண்டு 6,300 மாணவ மாணவியர்களுக்கு 19 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். இந்த 19 லட்சத்தோடு மேற்கொண்டு செலவு பண்ணவேண்டியது 35 லட்சம் என்று கணக்கிட்டிருக்கிறோம். எனவே இந்தக் கோரிக்கை எதிர் வரும் காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 478, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.